**தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அறிக்கைகள் ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 06 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 980 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 937.04 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 42.96 மில்லியன் அதாவது 4.38 சதவீத நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 771.00 | 763.20 | 7.80 | 1.01 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் | 209.00 | 173.84 | 35.16 | 16.82 |
| **மொத்தம்** | **980.00** | **937.04** | **42.96** | **4.38** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 29 அமைச்சுக்களிடமிருந்தும் 17 திணைக்களங்களிடமிருந்தும் ரூபா 3,503 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 2,448 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது அதன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 1,055 மில்லியன் தொகை அதாவது மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டில் 30 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான 27801 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| **செலவுகள்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ள படியானது** | **ஆகக்குறைந்த எல்லை** | **உள்ள படியானது** | **உச்ச எல்லை** | **உள்ள படியானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 53.00 | 52.82 | 40.00 | 45.98 | 220.00 | 158.62 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் கீழ் 07 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 551.11 மில்லியனாக காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **வைப்புக் கணக்கு இல.** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா மில்லியன்கள்** |
| 6003/0000/00/0054/0000/000 | (2.29) |
| 6000/0000/00/0002/0056/000 | 1.62 |
| 6000/0000/00/0013/0043/000 | 2.36 |
| 6000/0000/00/0018/0013/000 | 33.12 |
| 6000/0000/00/0001/0042/000 | 4.36 |
| 6000/0000/00/0016/0011/000 | 317.32 |

| | |
|---|---|
| 6000/0000/00/0017/0002/000 | 194.62 |
| | ---------------- |
| **மொத்தம்** | **551.11** |
| | ========= |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கானன முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

அத்திகதியிலுள்ளவாறான அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,614,964 ஆக இருந்தது. அதில் ரூபா 90,050 தொகை 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 333,795 தொகை 4 வருடங்களுக்கும் 8 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாகவும், ரூபா 2,191,119 தொகை 2 இற்கும் குறைவான வருடங்களுக்குரியதாக இருந்து இருந்த போதிலும், அம்மீதிகளைத் தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகள் தொடர்பில் இம்புல்வே பிரதேச செயலகத்தால் 02 செயற்திட்டங்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 335,900 தொகையான பிடித்துவைத்தல் பணத்தை அரசு வருமானத்திற்கு விடுவிக்காமலோ செலவு வைக்கப்படாமலோ பொது வைப்புக் கணக்கிலிருந்து.

(ஆ) கலவன மற்றும் இம்புல்வே பிரதேச செயலகங்களால் சமூக சூழலினூடாக நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களின் பூர்த்தியாக்கல் பின்னரான சாதக குறைபாடுகளிற்காக வைப்புக்கணக்கில் ரூபா 93,273 தொகை இருந்தது. குறைப் பொறுப்புக் காலம் கடந்திருந்த போதிலும், உரிய பிடித்து வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கோ அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ அத்தகைய அலுவல்களால் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவும்.

### 3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | |
| (அ) | நிதிப்பிரமாணங்கள் 177 மற்றும் 382 | 425,180 | குருவிட்ட, கஹசத்த மற்றும் இல்பத்த பிரதேச செயலகங்களினால் 30 சந்தர்ப்பங்களில் சேர்க்கப்பட்ட நாளாந்த காசு சேகரிப்புக்கள் 2 நாட்கள் தொடக்கம் 07 நாட்கள் வரையிலான கால தாமத்துடன் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 395(எச்) | | கிரில்லா பிரதேச செயலகத்திலுள்ள சீஜஜீஏஎஸ் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக வங்கிக் கணக்கிணக்க கூற்றினை தயாரித்தல், காசோலைகளை எழுதுதல், அறிக்கைகளை அனுப்புதல் போன்றவற்றிற்காக ஒரே அலுவலகர் அமர்த்தப்பட்டிருந்தார். |
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்டவாறான நிதிப்பிரமாணம் 371 | 332,950 | பல்வேறு நோக்கங்களிற்காக பெறப்பட்ட செயல்நிமித்த கட்டுநிதிகள் நோக்கம் பூர்த்தியடைந்த பின்னர் 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், எம்பிலிப்பிற்றிய அம்பல்வே, கஹவட்ட மற்றும் எல்பத்த பிரதேச செயலகங்களின் 23 செயல்நிமித்த உபகட்டுநிதிகள் 11 நாட்கள் தொடக்கம் 80 நாட்கள் காலதாமத்துடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 3.4 உள்நாட்டு நிதியளிப்புக்களின் கீழ் செயற்திட்டங்கள் அமுல்படுத்தல்

### போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட போதியளவில் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) இரத்தினபுரிய மாவட்ட பிரதேச செயலக பிரதேசத்திலுள்ள 04 பிரதேச செயலகங்களில் இலங்கை பெண்கள் அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட மீள்சுழற்சி கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்குறிப்பிட்ட மீள்சுழற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலனாளிகள் பெறப்பட்ட கடன்கள் 10 தவணைக்கட்டணங்களில் தீர்க்கப்பட வேண்டும். எம்பிலிப்பிற்றிய, குருவிச்ச மற்றும் இம்புல்வே பிரதேச செயலக பிரிவுகளின் நலனாளிகளால் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 110,353 கூட்டுத் தொகையான கடன் தவணைப்பணங்கள் அனுமதிக்கப்பட்ட காலத்தை மிஞ்சி 1 ½ வருடங்கள் தொடக்கம் 07 வருடங்கள் வரையிலான

காலதாமதத்துடன் நிலுவையாகவிருந்ததுடன் அலுவலகங்களானது அத்தகைய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை தவறியிருந்தது.

(ii) இரத்தினபுரி மற்றும் எம்பிலிப்பிற்றிய பிரதேச செயலகங்களின் மீள்சுழற்சி கடன் கணக்குகளிலுள்ள 2014 ஆம் ஆண்டிலிருந்து சராசரி நிலுவையாகவுள்ள மீதி ரூபா 1,068,260 தொகையாகும். அந்த பணத்தில் நலனாளிகளுக்காக கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிதி வங்கி கணக்குகளில் விளைவற்றிருந்தது.

(iii) அம்பிலிப்பிற்றிய பிரதேச செயலகத்தின் சமூகத்தின் முன்னைய பொருளாதார மீள்சுழற்சி கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்குச் சொந்தமாக ரூபா 43,700 தொகை மோசடி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாற்றுத்திறனாளிகளிற்கான வீடமைப்பு உதவி நிகழ்ச்சித்திட்டம் மாற்றுத்திறனாளிகளிற்கான தேசிய செயலகத்தால் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கஹவத்த பிரதேச செயலகத்தின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட நலனாளிகளின் பெயர்ப்பட்டியல் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆகஸ்ட் மாதம் வரை அந்த மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நலனாளியொருவருக்கு ரூபா 80,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தற்போது இருக்கின்ற தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக இலத்திரனியல் தேசிய அட்டையை வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆட்பதிவுத் திணைக்களம் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் பிரதேச செயலகத்தால் ஏற்படுத்திய அச்செலவீனம் பயனற்ற செலவீனமாகவிருந்தது.

(i) எம்பிலிபிட்டிய மற்றும் இம்புல்பே பிரதேச செயலகங்களால் பெறப்பட்ட விண்ணப்ப படிவங்களின் இருப்புக்கள், வழிகாட்டிகள் மை மற்றும் தேவையான உபகரணங்களின் பெரிய தொகை 2016 ஆகஸ்ட் இலும் உரிய பிரதேுச செயலகங்கள் இரண்டு வருடங்களாக விளைவற்றிருந்தது.

(ii) அந்தச் செயற்திட்டத்திற்கான அலுவலர்களை பயிற்சிவிப்பதற்கு 03 பிரதேுச செயலகங்களால் ரூபா 214,370 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் ஆரம்பித்ததிலிருந்து 03 வருடங்கள் காலப்பகுதி கடந்திருந்த போதிலும், ஒரு தேசிய இலத்திரனியல் அடையாள அட்டையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கல்வானை பிரதேச செயலகப் பிரிவில் 2010 ஆம் ஆண்டிலிருந்து கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் அமைச்சால் கித்துல் கன்றுகள் அமுல்படுத்தப்பட்ட உற்பத்திகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலின் முன்னேற்றத்தின் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பதிவிற்காக 510 விண்ணப்பப்படிவங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் 22 அல்லது 4 சதத்தை விட குறைவான அடையாள அட்டைகள் 2016 மே வரையிலும் வழங்கப்பட்டிருந்தது.

(ii) கித்துல் கன்றுகள் உற்பத்திகளின் உற்பத்தியாளர்களிற்கு கித்துல் கன்றுகள் தீர்மானித்தவாறு வழங்கப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டில் அவர்களுக்காக இலவசக் கட்டணத்தில் பொருளாதார உபகரணத் தொகுதியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் உற்பத்தியாளர்களிற்காக 2011 சனவரியிலிருந்து செயற்பாட்டுக்கு வரும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட ''றன்டியா''ஓய்வூதிய திட்டத்திற்காக கித்துல் கன்றுகள் உற்பத்தியாளர்கள் எவரையும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கலவான, வெவல்களத சோவ பியச போன்றவற்றின் அலுவலக நிர்மாணங்கள் ரூபா 205,900 செலவழிப்பதன் மூலம் 2010 ஆம் ஆண்டின் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 மே அளவிலும் இது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கிறிஎல்லாப் பிரதேசத்தின் கர்ப்பணிப் பெண்களிற்கு போசனை உணவை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம் 2015 ஆம் ஆண்டில் பிள்ளைகள் அலுவல்கள் அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து அமுல்படுத்தப்பட்டிருந்தது. பெறப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 1,984,000 அல்லது 37 சதவீத ஏற்பாடுகள் 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் சேமிக்கப்பட்டிருந்தது. போசனைக் கூடைகளின் விநியோகமானது 2015 மார்ச் இலிருந்து 2015 ஆகஸ்ட் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குருவிச்ச பிரதேசத்தின் 1225 நலனாளிகளில் 700 நலனாளிகள் போசனைப் பைகளை வழங்கியிருந்தனர். மேற்குறிப்பிடப்பட்ட உணவுக் கூடைகளின் தரமானது பொறுப்பான அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) மாவட்டத்தில் கமநல தொழில்முயற்சி சமூகத்தின் தாபிப்பு மாவட்டத்தில் சிறந்த கமநல முயற்சியாளரை தெரிவு செய்தல் மற்றும் சான்றுதழ்கள் வழங்கல் போன்றன கமநல அமைச்சால் அமுல்படுத்தப்பட்ட இளைஞர் கமநல முயற்சி செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இருந்தபோதிலும், அதற்கேற்ப நடைபெற்றிருக்கவில்லை. அதேபோல், வர்த்தக பண்ணை நிகழ்ச்சிதிட்டம் - 2015 இன் கீழ் வர்த்தக பண்ணையின் மாவட்ட சமூகம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கை பெண்கள் பணியகத்தால் அமுல்படுத்தப்பட்ட விதவைகள், பெண்களினை வினைத்திறனாக வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன்களை வழங்குதல் 2013 திசெம்பர் இலிருந்து இரத்தினபுரி பிரதேச செயலகத்தால் நிறுத்தப்பட்டிருந்தது. சேமிப்புக் கணக்கில் காசு மீதியானது பேணப்பட்டிருந்ததுடன் அதில் 2017 பெப்ரவரி இலிருந்து ரூபா 109,585 தொகையானது குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஐ) பிரதேச செயலகத்தின் இடர் முகாமைத்துவ அமைச்சால் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்காமையால் இடர் நடவடிக்கைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) இலபத்த பிரதேசத்தில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சேதமாகிய வீடுகளிற்கு மீட்சியாக செலுத்த வேண்டிய ரூபா 3,424,000 2016 திசெம்பர் அளவிலும் செலுத்தப்பட்டிருக்க வில்லை. அதற்கிணங்க 35 ஏக்கர்கள் காணிக்கு தொடுக்கப்பட்ட அரிக்கப்பட்ட காணி மற்றும் பலவெல கோயில் வீதியின் உடைந்த தூண்

போன்றவற்றை திருத்தப்பட்டிருக்காததுடன் நிறெல்லா, வற்றகட மற்றும் பலவெல கிராமிய சேவை பிரிவுகளில் ஏற்பட்ட புவிச்சரிவு இடரையும் அதனால் வீடுகள் சேதமாக்கப்பட்டமையும் அதனால் ஏற்பட்ட இடரை எதிர்கொண்ட கிறிபஹம கிராமத்தின் மீது எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கஹவத்த பிரதேசத்தில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது சேதமான வீடுகளிற்காக செலுத்தவேண்டிய ரூபா 1,796,100 தொகையான மீட்சிக் கொடுப்பனவு 2017 சனவரி வரையிலும் தாமதமாக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக நடுத்தர இடருடனான 20 வீடுகள் அன்டான பிரதேசத்தில் இருந்தது. அதற்கான திருத்தமாக, அன்டான தோட்டத்திற்கு சொந்தமான காணிகள் 2016 ஆகஸ்ட் வரையிலும் சுவிகரிக்கப்பட முடியாதிருந்தது.

(iii) குருவிச்ச பிரதேசத்தில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட இடரால் சேதமாகியிருந்த வீடுகளிற்காக 2017 யூன் அளவிலும் உரிய நலனாளிகளுக்கு ரூபா 327,914 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) இம்புல்வெல, காறடிகன்த வீதியின் மீள் நிர்மாணத்திற்கான மதிப்பிடப்பட்ட வேலைகளின் 22 உருப்படிகளில் ரூபா 288,484 தொகையான வேலைகளின் 2 உருப்படிகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 751,518 தொகையான நிர்மாண வேலையின் அனைத்து மீதியும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. ஆகையால், உடன்படிக்கையின் பிரகாரம் வேலை கைவிடப்பட்டமையால் சேதங்களாக ஒப்பந்தக்காரரிடமிருந்து ரூபா 220,805 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 05 பிரதேச செயலகங்களில் நிறைவேற்றப்பட்ட 15 வேலைகளின் மாதிரிகளினை பரீட்சிக்கையில் ரூபா 1,927,253 கூட்டுத்தொகையான வேலைகளின் சில பொருட்கள் முறையாக மேற்கொள்ளப்படாமிருந்தது.

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

---

மாவட்ட செயலகம் ஈடுபட்டுள்ள சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையில் இருந்தது தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்களின் விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) கொடகெவெல பிரதேச செயலகத்தினால் அரைவட்டமான கடரையொன்றுடன் கூடிய அளவிலான நகரத்தில் அமைக்கப்பட்ட கூரையொன்றில் ரூபா 436,500 பெறுமதியான 75'x30'x20' அளவில் சமூகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அத்தகைய பெரிய தாள் மேவுகையின் விதைக்கான தேவைப்பாட்டை சமூகம் விளக்கமளிக்கப்பட்டிருக்காததுடன் இதற்கான களஞ்சிய வசதி சமூகத்திற்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) 1992 பெப்ரவரி 18 ஆந் திகதிய 7/92 ஆம் இலக்க மற்றும் 1999 ஒக்தோபர் 08 அந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளின் முரணாக, இலங்கை நிர்வாக சேவையின் அலுவலகம் தரம் III அலுவலராகவிருந்த இரத்தினபுரி உதவி மாவட்டச் செயலாளர் தனது தனிப்பட்ட பயணிற்காக அரச வாகனங்களை பயன்படுத்தினர். 29 மாதங்களின் போது அவரால் பயன்படுத்திய 2 வாகனங்களுக்காக ரூபா 110,142 தொகை எரிபொருட்களிற்காக ஏற்பட்டிருந்தது.

தாபன விதிக் கோவையின் பகுதி II இன் XLVII அத்தியாயத்தின் உப பிரிவு 8.2 இன் பிரகாரம் வாகனங்களின் தவறான பயன்பாட்டுடன் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதே உறுப்புரிமையின் 1.4 ஆம் உபபிரிவின் பிரகாரம் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஒழுக்காற்று அதிகாரசபைக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரத்தினபுரி மாவட்ட செயலகரின் கடிதங்களால் நிரூபிக்கப்பட்ட சில நபர்கள் வருடாந்த குத்தகை அடிப்படை மீதி குத்தகை நிலங்களை கொண்டிருந்த தகவல்களை மறைப்பதன் மூலம் கம்பனிக்கு துண்டுநிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக காணி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெறுவதற்கு குருவிச்சு பிரதேச செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. பொது அலுவலகர்களால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பான முதல் பட்டியலின் (12) பந்தியின் பிரகாரம் போலியான ஆவணங்கள் தயாரித்து தகவல்களை மறைப்பதன் மூலம் பெறப்பட்ட அனுமதிப்பத்திரத்தில், அரச காணியை பெறுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரத்தை பெறுதல் குற்றமாகும். தாபன விதிக்கோவையின் தொகுதி II இன் பிரகாரம், அத்தியாயம் XLVII இன் 8.2 ஆம் உபபிரிவின் பிரிவின் பிரகாரம் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கு நிறுவகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதே அத்தியாயத்தின் உப பிரிவின் 1.4 இன் பிரகாரம் ஒழுக்காற்று அதிகார சபைக்கும் அறிக்கையிட்டிருக்கவில்லை.

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. தெரிவுச் செய்கையின் போது அவதானிக்கப்பட்ட அரச பெறுகை வழிகாட்டல் முறையிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்ட அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விடயங்கள் கீழே காட்டப்படுகின்றன.

(அ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4 வழிகாட்டலுக்கு முரணாக இம்புலே பிரதேச செயலகத்தில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் விலைமனுக்களை திறக்கும் திகதிகளை அறிவிக்காமல் திறந்த சர்ந்தப்பங்கள் இருந்தது. அதற்கிணங்க, கஹவத்த, மற்றும் இம்புல்வே பிரதேச செயலகங்கள் 45 சந்தர்ப்பங்களில் 04 ஐ விட குறைவான விலைமனுக்களை அழைக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.2.1(அ) மற்றும் 5.6 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், உரிய விலை மனுதாரர்க்குரிய அனைத்து தேவையான உரிய தகவல்களும் தெளிவாகவும் விஷேடமாகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கஹவத்த, இம்புல்வே பிரதேச செயலகங்கள் பெறுகைக் குழுவானது விலைமனுக்களை மீளாய்வு செய்யும் நேரத்தில் தேவையான விதப்புரைகளை தீர்மானித்தல் முறைமை பின்பற்றப்பட்டிருந்த சர்ந்தப்பங்கள் இருந்தன.

(இ) அரச பெறுகை வழிகாட்டிகளின் 1.2.1(அ) ஆம் வழிகாட்டிகளிற்கு முரணாக, இம்புல்வே, கஹவத்த பிரதேச செயலகங்கள் 11 சந்தர்ப்பங்களில் உரிய விதப்புரைகளுடன் இணங்கிய அதிகுறைந்த விலைக்கூறை நிராகரிப்பதனால் 2015 இல் ரூபா 387,914 கூடிய விலைக்கூறை சமர்ப்பித்த விலைமனுதாரருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

இரத்தினபுரி மாவட்ட விதாத வள நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு செவ்வையின் போது பின்வரும் முகாமைத்துவ குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஒக்தோபர் தொடக்கம் 2016 யூலை வரையிலான 22 மாதங்கள் காலப்பகுதியின் போது இரத்தினபுரி விதாத நிலையத்தால் நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகள் 62 ஆகவிருந்தது. பயிற்சிப்பட்டறைகள் நடாத்துவதன் மாதாந்த சராசரி 2.8 சதவீதமாகவிருந்தது. காலப்பகுதிக்கான மொத்த செலவீனம் ரூபா 3,628,654 தொகையாகும். அதற்கிணங்க பயிற்சிப்பட்டறையொன்றிற்கான கிரய ரூபா 58,527 ஆகவிருந்ததுடன் அதனால் நலனாளிக்கான கிரயம் ரூபா 2,058 பெறுமதிக்கு மேலதிகமாகவிருந்தது.

(ஆ) 2005 ஆம் ஆண்டில் அமைச்சிடமிருந்து இரத்தினபுரி விதாத நிலையத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக பெறப்பட்ட ரூபா 65,000 தொகையான மரக்கறிகளின் ஈரம்நீக்கி இயந்திரம் மற்றும் ரூபா 35,000 தொகையான வெதுப்பக அடுப்பு 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேலதிகமாக பயன்படுத்தப்படாமலிருந்து.

(இ) எம்புல்தெனியா விதாத நிலையத்திற்கு வழங்கப்பட்ட கணனி 2009 மார்ச் 08 இல் திருடர்களால் திருடப்பட்டிருந்தது. இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடைத் தவிர அதற்கான வேறெந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டிற்காக எலபத்த விதாத நிலையத்தால் எந்தவொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால், காலப்பகுதிக்காக ஏற்படுத்தப்பட்ட ரூபா 901,385 தொகையான கட்டிடவாடகை பயனற்ற செலவீனமாகவிருந்தது.

## 3.8 பயனற்ற செலவீனம்

மாவட்டச் செயலகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வு தெரிவு பரீட்சையின் போது வெளிப்பட்ட குறைபாடுகள் மீதான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) கலவான, டெல்ஹொட, ஈஸ்ற்கொலனியின் பல்நோக்கு கட்டிடத்தின் நிர்மாணித்தலில், மதிப்பீடுகளானது ரூபா 315,484 தொகையான வேலையின் ஏழு அத்தியாவசிய பொருட்களை கைவிடுவதனால் தயாரிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய ரூபா 327,537 தொகையான வேலையின் ஏனைய 05 பொருட்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால், உரிய நோக்கம் முறையாக நிறைவேற்றிருக்கப்படாததுடன் அந்த கட்டிடமானது தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கிறில்லா, டெஹெறகொட, கல்பொத, தியவற கிராமத்தின் மைதான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட ரூபா 75,604 தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், அதனை மைதான நிலையத்திற்காக பயன்படுத்துவதற்கு சாதகமற்றதாகவிருந்தது.

(இ) கிராமமொன்றிற் கான வேலையொன்றின் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் இம்புலேவில் மேற்கொள்ளப்பட்ட 03 செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றை பூர்த்தி செய்வதற்கு தேவையான நிதிகள் 2016 செப்தெம்பர் அளவிலும் பெறப்பட்டிருக்கவில்லை. ஆகையால், அத்தகைய செயற்திட்டங்கள்

நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவழிக்கப்பட்ட ரூபா 1,145,861 தொகையான நிதியங்கள் உரிய நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தும் வரை பயனற்ற செலவீனமாகவிருந்தது.

(ஈ) 02 பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றப்பட்ட 03 வேலைகளிற்காக ரூபா 53,251 தொகை மேலதிகமாக செலுத்தப்படுகிறது. அதற்கிணங்க 04 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட நிறைவேற்றப்படாத 07 வேலைகளிற்கான ரூபா 422,353 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.9 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

2015 சனவரியில் இரத்தினபுரி பிரதேச செயலகத்தின் கப் வாகனமொன்றிற்கு ஏற்படுத்தப்பட்ட விபத்துக்கள் தொடர்பில் 104(1) நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டிய விசாரணை 13 நாட்கள் காலதாமதமாகவிருந்தது. அதற்கிணங்க ஒரு மாதகாலப்பகுதி ஆரம்ப அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தாமதமாகியிருந்தது. முழு அறிக்கையை பெறுவதற்கு விசாரணை சபையை நியமிப்பதற்கு 09 மாதங்கள் காலப்பகுதி எடுக்கப்பட்டிருந்தும் விபத்து நடைபெற்று 21 மாதங்கள் காலதாமதத்துடன் 2016 ஒக்தோபர் 15 இல் விசாரணை சபை அறிக்கையை கொடுத்திருந்தது.

### 3.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 59 | 53 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 41 | 25 | 16 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,902 | 1,780 | 122 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 179 | 180 | 05 | 01 |
| | **மொத்தம்** | **2,181** | **2,038** | **144** | **01** |

ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகை பதவியணினர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்ளவில்லை.